# கொழும்பில் பட்டப்பகலில் துப்பாக்கிமுனையில் ரூபா 76 லட்சம் சம்பளப் பணம் கொள்ளை!

(கொழும்பு)
வியாங்கொடையில் நேற்று பட்டபகலில் இனந்தெரியாத ஆயுதபாணிகளால் 76 லட்சம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

வியாங்கொடையிலுள்ள 'வேய் ரெக்ஸ்' நிறுவனத்தின் ஊழியர்களின் சம்பளப் பணமே இவ்வாறு பட்டப்பகலில் துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப்பட்டது.

கொழும்பு டி. ஆர். விஜேவர்தன மாவத்தையில் உள்ள மக்கள் வங்கிக்கிளையில் இருந்து தனியாருக்கு சொந்தமான பாதுகாப்பு வாகனமொன்றில் இந்தச் சம்பளம் பணம் கொண்டுவரப்பட்ட

(5ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 22 இதழ் 307
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 8-12-1994

## பாதை திறப்பது பற்றி தீவிர ஆலோசனை

(கொழும்பு)
யாழ். குடா மக்கள் செல்வதற்கு ஆனையிறவுப் பாதையை திறப்பது அல்லது பூநகரி சங்குப்பிட்டி பாதையினூடாக பொது மக்கள் செல்ல அனுமதிப்பது பற்றி விரைவில் ஒரு முடிவுக்கு வருவதுபற்றி அரசு ஆலோசித்து வருவதாக இலங்கை வானொலி நேற்று தெரிவித்தது.

வடபகுதிக்கான வீதிப் போக்குவரத்தை விரிவுபடுத்தும் துரிதமுயற்சியாகவே

(6-ம் பக்கம் பார்க்க)

# ★ இலங்கைத் தலைவர்களின் பாதுகாப்பிற்கு இந்தியபடையின் உதவியுடன் இலங்கையில்கமாண்டோபடை

## அமைச்சர் கதிர்காமர் இந்தியாவுடன் பேச்சு

[புதுடில்லி]
இலங்கையில் தமிழ்ப் போராளிகளின் குண்டுத் தாக்குதல்களிலிருந்து அரசியல் தலைவர்களை பாதுகாப்பதற்காக 'சிறப்பு கமாண்டோ' படைப்பிரிவொன்றை அமைப்பதற்கு இந்தியா உதவியளிக்குமென இலங்கை வெளியுறவு அமைச்சர் திரு. லக்ஷ்மன் கதிர்காமரிடம் இந்திய அதிகாரிகள் உறுதியளித்துள்ளனர்.

(5ம் பக்கம் பார்க்க)

## ★ கதிர்காமரின் இந்திய விஜயம் முக்கியத்துவமானது

[புதுடில்லி]
இந்தியாவோடு இலங்கை எந்தவிதமான இரகசியப் பேச்சுவார்த்தைகளையும்வைத்துக்கொள்ளாது என்று கூறியுள்ள இலங்கை வெளிநாட்டமைச்சர் திரு. லக்ஸ்மன் கதிர்காமரின் இந்திய விஜயம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த

(ம் பக்கம் பார்க்க)

## அரசின் யுத்தநிறுத்தம் பற்றி புலிகளுக்கு அறிவிக்கப்படும்

(கொழும்பு)
விடுதலைப்புலிகளுடன் போர் நிறுத்தம்செய்வதென்ற தமது முடிவை அரசு சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் ஊடாக விடுதலைப் புலிகளுக்கு அறிவிக்கவுள்ளதாக அரசு வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.

போப்பாண்டவரின் இலங்கை விஜயத்தை ஒட்டி 'கிறிஸ்மஸ்சுக்கு' முன்னர் போர் நிறுத்தம் அறிவிப்பதென கொழும்பில் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி சந்திரிகா தலைமை

(6ம் பக்கம் பார்க்க)

## இந்தியாவில் சந்திரிகாவின் பாதுகாப்பு பற்றியும் பேச்சு

(புதுடில்லி)
1995ம் ஆண்டு ஏப்ரல் மாதம் இந்தியா செல்லவுள்ள இலங்கை ஜனாதிபதி சந்திரிகாவுக்கு இந்திய அரசு தகுந்த பாதுகாப்பு வழங்கவேண்டுமென இந்திய அரசு அதிகாரிகளிடம் இலங்கை வெளியுறவு அமைச்சர் திரு. லக்ஷ்

(5-ம் பக்கம்பார்க்க)

## யுத்த நிறுத்தம் குறித்து இராணுவத்திற்கு தெரியாது

(கொழும்பு)
விடுதலைப்புலிகளுடன் யுத்த நிறுத்தம் செய்ய அரசு முடிவு செய்துள்ளதாக அறிவித்துள்ள போதிலும் இது குறித்து தங்களுக்கு எதுவும் தெரியாதென இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் கெமுனு குலதுங்க பி. பி. ஸி. சந்தேசிய'விற்கு தெரிவித்தார்,

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்;

(2-ம் பக்கம் பார்க்க)

## அரசு—புலிகள் பேச்சு; இந்தியாவிற்கு விளக்கம்

[புதுடில்லி]
இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்கள் குறித்து இலங்கை வெளியுறவு அமைச்சர் திரு. லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியாவிற்கு விளக்கமளித்துள்ளார்,

இந்திய வெளியுறவு இணையமைச்சர் திரு. ஆர். எல். பாட்டியாவை நேற்றுக்காலை

(6ம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவு முகாமினுள் ஊடுருவ புலிகள் முயற்சி

(கொழும்பு)
ஆனையிறவு இராணுவ முகாமிற்குள் விடுதலைப் புலிகள் நேற்று ஊடுருவ முயன்றதாக இராணுவ வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.

இவ்வாறு இராணுவ முகாமினுள் நுழைய முயன்றவர்களை நோக்கி படையினர் துப்பாக்கிச்சூடு நடாத்தியதையடுத்து புலிகள் தப்பிவிட்டதாகவும் எனினும் புலிகளை தேடும் பணிகள் தொடர்ந்து நடப்பதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனையிறவு பாதையை திறக்க தாங்கள் தயாராயிருப்பதாக அரசு கூறியுள்ள அதேவேளை படையினர் மேற்படி தகவலை கூறியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. -சி-ம

## ஆனையிறவுபாதையை திறக்க அரசு முடிவு செய்துள்ளதாம் எனினும் படை நடவடிக்கைதொடரும்

(கொழும்பு]
வடபகுதி அபிவிருத்தி நடவடிக்கையை துரிதப்படுத்தும் முயற்சியாக ஆனையிறவு பாதையை மீண்டும் திறப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என இலங்கை வானொலி நேற்று அறிவித்தது

இந்தப் பாதை திறந்துவிடப்பட்டால் வடபகுதி மக்களுக்கு நிவாரணம் வழங்குவது மிகச் சுலபமாக இருக்கும் விடுதலைப் புலிகள் இயக்

(6-ம் பக்கம் பார்க்க)

# கம்பியூட்டர் யுகத்தில் மனிதனைவிட இயந்திரங்களுக்கே முக்கியத்துவம்

(யாழ்ப்பாணம்)

மனிதனுக்கு ஏற்படும் இயற்கை அழிவுகளிலிருந்து மீட்சி பெறுவதற்கு பூமிக்கிரகத்துடனை ஒன்றித்த இயற்கைச் சூழலே மிகவும் சிறந்த வழியாகும், இவ்வாறு சுற்றுச் சூழல் பாதுகாப்பு நிறுவனம் உலக சுகாதார நிறுவனம், உலக உணவு நிறுவனங்கள் இணைந்து மேற்கொண்ட ஆய்வின் மூலம் வலியுறுத்தியுள்ளார்கள், யாழ். நாவலர் கலாச்சார மண்டபத்தில் யாழ். மாநகராட்சி மன்ற சேதனப் பசளை உற்பத்திப் பிரிவும், ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியப் பிரிவும் இணைந்து அண்மையில்நடத்திய சூழல் பாதுகாப்புப் பற்றிய நிகழ்ச்சியின்போது வெளியிடப்பட்ட வெளியீடொன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் வெளியீட்டில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது: இன்றைய கம்பியூட்டர் யுகத்தில் மனிதனைவிட இயந்திரங்கள் முதன்மை வகிக்கிறது. உலகில் வேகமாகப் பெருகி வரும் சனத்தொகை மற்றும் வளர்முக நாடுகளில் ஏற்பட்டிருக்கும் விஞ்ஞான தொழில் நுட்பத்துறைகளில் ஏற்பட்டிருக்கும் போட்டிகளே இதற்குக் காரணமாகவுள்ளது. உலகில் அதிகரித்துவரும் சனத்தொகைக்கு தேவையான உணவைப் பெறுவதற்கு விவசாய உற்பத்தியைப் பெருக்கவேண்டியுள்ளது, இத் துறையை விருத்தியடையச் செய்வதற்கு அதிகளவில் இரசாயனப் பொருட்களைப் பாவிக்கவேண்டிய துரதிஷ்டவசமான நிலை உருவாகியுள்ளது.

உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக பல பயன்தரு காடுகளையும் அழிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை உருவாகியுள்ளது. இதனால் இயற்கைச்சூழல, காடுகளில் வாழும் விலங்குகள், பறவைகள், இடம்பெயர்ந்து வாழ வேண்டிய நிலை ஏற்படுகிறது. இது மட்டுமல்லாது தொழில் நுட்பத்துறையில் ஏற்பட்டிருக்கும் போட்டிகள் காரணமாக பல லட்சக்கணக்கான தொழிற்சாலைகள் தோன்றியுள்ளன. இதனால் இவைகளுக்கு வேண்டிய எரிபொருட்களைச் சேகரிப்பதற்கு பல எரிபொருள் ஆக்கிகள் புதிதாகத் தோன்றின இவற்றின் கழிவுகள் யாவும் கடலில் சேருவதால் கடல் நீரும் மாசுபடும் அபாயம் தோன்றியுள்ளது. இதனால் கடலில் வாழும் உயிரினங்கள் பல அழிந்து போயும் மற்றும் கடலை அண்டிய பகுதிகள் அழுக்கடையும் நிலையும் உருவாகியுள்ளது.

இக்காரணங்களைக் கருத்தில் கொண்ட ஐ. நா. வின் கிளை ஸ்தாபனங்களாகிய உலகசுகாதார நிறுவனம், உலகஉணவு. விவசாய நிறுவனத்துடன் இணைந்து உலக சுற்றுச்சூழல் பாதுகாப்பு சேவைகள் நிறுவனம் பல நாடுகளுக்குச் சென்று பூகோள ரீதியான ஆய்வுகளை நடத்தி அவற்றின்மூலம்கிடைத்த பெறுபேறுகளை உலகின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளன. அத்துடன் சுற்றுச் சூழல், சுகாதாரம், போஷாக்கு போன்ற விடயங்களுக்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டு ஆராயப்பட்டது.

உலகில் பல நாடுகளிலும் விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளில உயர் விளைச்சலைப் பெற அதிகளவில் இரசாயன உரவகைகள், கிருமி நாசினிகள் பாவித்ததன் விளைவாக பூமியின் நீர் நிலவளங்களில் நச்சுத்தன்மை அடையும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக கண்டுபிடித்துள்ளார்கள். இதனால்சிறுவர்கள் அடிக்கடி நோய்வாய்ப்படுவதாகவும், இவர்களுக்கு நோயெதிர்ப்புச் சக்தி குறைந்து போவதாகவும் வளர்ந்தோர்களுக்கு புற்றுநோய் வரும் ஆபத்துக்களுமுண்டு என்று அந்த ஆய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (162-சி

---


### வரி விளம்பரம்

**ஆங்கிலம் கணிதம் 95**

ஆண்டு 5, 6ல் இருந்து O/L வரை விசேடமாக ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும் ஆசிரியர் B. Sc 85. சிவன் கோவிலடி. மணல்தறை லேன், திருநெல்வேலி. (சி-1341)

---

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.**

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து தொழில்நுட்ப வியலாளர் தரம் II பிரிவு 'பி' பதவிக்கான விண்ணப்பங்கள் 1995-01-05 ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

சம்பள அளவுத் திட்டம் :

ரூபா 2890 — 10X55 —7X65 — 3895/- மாதமொன்றுக்கு

தகைமைகள் :

இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் 05 திறமைச் சித்திகளுடன் க. பொ. த. (சாதாரண) தேர்வில் ஆறு பாடங்களில் சித்தி. திறமைச் சித்திகளுள் கணிதம், விஞ்ஞானம் என்பன அடங்கியிருத்தல் வேண்டும்.

வயது ;

40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

தெரிவு :

உளச் சார்பறித்தேர்வின் மூலமும் நேர்முகப் பரீட்சையின் மூலமும்.

குறிப்பு :

தொழில் நுட்பவியலாளர் சேவையின் 'பி' பிரிவின் கீழான நியமனம் பெறுபவர் முதலில் ஒரு மாதத்திற்கு 2890/- மாதாந்த நிலையான சம்பளத்தில் மூன்றுண்டுகளுக்கு ''பயிலுனர் தொழில் நுட்பவியலாளர்''ராக நியமனம் பெறுவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப் பல்கலைக்கழகத்தின் தாபனக் கிளைச் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்பட வேண்டும். தபால் மூலம் படிவங்களையும் விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட ரூபா 20,- பெறுமதியான காசுக்கட்டளை / தபாற்கட்டளை யுடன் 23 X 10 ச. மீ. அளவுடைய சுய முகவரியிட்ட ரூபா 1/- முத்திரையொட்டப்பட்ட கடித உறையையும் அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுதிகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் விபரங்கள் தெளிவின்றிக் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

குறிப்பு :

★ விண்ணப்பப் படிவங்களையும் இதர விபரங்களையும் கொழும்பு 13, ஆட்டுப் பட்டித் தெரு 154-ம் இலக்கத்திலுள்ள யாழ்ப்பாணக் கூட்டுறவுக் களஞ்சியத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
1994 - 12 - 05.

(ஏ-4572)


---

## முன்னைய தவறுகளை இனி விடமாட்டோம்

— சிறிமா கூறுகிறர்

(கொழும்பு)

முன்னைய தவறுகளை இனி மேல் செய்யமாட்டோம் என பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற வைபவமொன்றில் இதனை தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

1977-ம் அண்டு நடைபெற்ற தேர்தலில் படுதோல்வியடைந்தோம். கடந்த காலங்களில் நாம் செய்த பல தவறுகளே அதற்கு காரணமாகும் அதனை தற்போது நன்குணர்ந்துள்ளோம். இந்தத் தவறுகளை மீண்டும் செய்யாதிருக்க எமது கவனத்தை செலுத்துவோம் எனவும் தெரிவித்தார். -சி

---


# கண்ணீர் அஞ்சலி

## அமரர் வைத்திலிங்கம் சுப்பிரமணியம்

[முன்னைநாள் யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர்)

யாழ். இந்துக்கல்லூரி முன்னுள் ஆசிரியர் வைத்திலிங்கம் சுப்பிரமணியம் அவர்கள் அமரத்துவம் அடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றோம் கால் நூற்றுண்டுக்கு மேலாக யாழ். இந்துக் கல்லூரியில்தாவரவியல், இரசாயனவியல் ஆசிரியராக அவர் ஆற்றிய பணிகளை யாழ். இந்து பழைய மாணவர்கள் என்றென்றும் நினைவு கூரக் கடமைப்பட்டவர்கள். அவரின் நற்பணி வாழ்வை நன்றிப் பெருக்குடன் நினைவு கூருவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

செயலாளர்
யாழ். இந்து பழைய மாணவர் சங்கம்

யாழ். இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.
1994-12-07

(எ 4574)


---


தொழில்நுட்பக்கல்லூரி

## அனுமதி — 1995

தேசிய கைப்பணிச் [தொழில்] சான்றிதழ் கற்கை நெறிகள்

மேற்படி விடயம் சம்பந்தமாக 1995 - 11 - 11-ம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்வரும் பயிற்சிநெறிகளுக்கு 10-ம் ஆண்டைப் பூர்த்தி செய்தவர்களும் 1994 - 12 - 23-ந் திகதிக்கு முன்னர் அதிபர், தொழில்நுட்பக்கல்லூரி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1. மேசன் கற்கைநெறி - ஒரு வருடம் ( பகல் )
2. மரப்பொறியியக்க வல்லுனர் கற்கைநெறி- ஒரு வருடம் ( பகல் )
3. நீர்க்குழாய் கற்கைநெறி - ஒரு வருடம் ( பகல் )
4. மின்னியலாளர் கற்கை நெறி- இரு வருடங்கள் ( பகல் )
5. பொருத்து வல்லுனர் கற்கை நெறி- இரு வருடங்கள் ( பகல் )

க. ஜெயரத்தினம்
அதிபர்.

தொழில்நுட்பக் கல்லூரி,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்,
1994-12-07.

(ஏ-4573)


---

## இன்று

(கொழும்புத்துறை)

சரசாலை - நுணுவில் ஸ்ரீ சிதம்பர விநாயகர் ஆலயத்தில் விநாயகர் ஷஷ்டி விரதம் இன்று 8-ந் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11-30 மணிக்கு விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாடுகளுடன் இடம்பெறும். -154

0 0 0

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை ஆத்திசம்பதி அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் ஆலயத்தில் கடந்த 20 தினங்களாகப் பிள்ளையார் பெருங்கதை விநாயகர் ஷஷ்டி விரதம் நடைபெற்று இன்று வியாழக்கிழமை நண்பகல் 11 மணிககு விசேட அபிஷேகம, பூசை, ஆராதனை வழிபாட்டுடன் பிள்ளையார் பெரும்கதை முடிவுறும். -154

0 0 0

(கொழும்புத்துறை)

கோப்பாய் வடக்கு இலுப்பையடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில இன்று 8-ந திகதி வியாழக்கிழமை நண்பகல் விநாயகர் விரதம், பிள்ளையார் பெரும்கதைப் படிப்பு நிறைவுறு . -154

### யுத்த நிறுத்தம்

(1ம் பக்கத தொடர்ச்சி)

சிலவேளைகளில் உயர் மட்டத்தில் போர் நிறுத்தம் பற்றி பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றிருக்கலாம். ஆனல் போர் நிறுத்தம் பற்றியோ அதனைஎந்த முறைப்படிகடைப்பிடிப்பது? என்றஎந்தவிதமான அறிவுறுத்தல்களும் உத்தியோகபூர்வமாக அரசாங்கத்திடம் இருந்து எமக்கு வரவில்லை என்றுர்.

இதுபற்றி ஏ.எப்.பி.செய்தியாளரான அமல் ஜெயசிங்க கருத்துத் தெரிவிக்கையில்; அரசாங்கம் இது சம்பந்தமாக இன்றும் அறிவிக்கவில்லை என்று கூறினர். -மசி

புதிய சம்பளம் வழங்கப்படாவிடின்

# நாடு தழுவிய போராட்டத்தை ஆசிரியர்கள் நடத்துவார்கள்

(கொழும்பு)

ஆசிரிய சேவை தொடர்பான முழுமையான சட்டத்தை அரசு இன்னும் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தவில்லை. இது ஆசிரியர்களுக்கும் ஆசிரிய சங்கங்களுக்கும் அதிருப்தியைத் தந்துள்ளது. ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்துமாறு இன்று வரை சுற்றுநிருபங்கள் தயாரித்து அனுப்பப்படவும் இல்லை. எனினும் 99% இலங்கை ஆசிரிய சேவையையும் புதிய சம்பளத் திட்டத்தையும் ஆசிரிய சங்கங்களின் சம்மேளனத்திற்கு உறுதியளித்தபடி நிறைவேற்றும் என நம்புகிறோம். இதனை ஜனவரி 95ல் அரசு நடைமுறைப்படுத்தத் தவறினால் நாடு தழுவிய ரீதியில் இலங்கையிலுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆசிரியர்கள் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடுவது தவிர்க்கமுடியாததாகி விடுமென இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் த. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு விவேகானந்தா கல்லூரியில் எடியுக்கேசன் இன்ரநாஷனல் பிரடரிக் ஈபேர்ட் மன்றம் ஆகியவற்றுடன் இ. த. ஆ. சங்கம் நடாத்திய ஆசிரியர்களின் கடமைகள் பொறுப்புகள் உரிமைகள் சலுகைகள் என்ற விடயம் தொடர்பான கருத்தரங்கில் உரையாற்றும் போதே திரு. மகாசிவம் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசுகையில்:-

ஆசிரிய சேவை ஜனவரி 95ல் அமுல்படுத்தப்படும் போது கடந்த 2 தசாப்தங்களாகச் சீரழிந்து சென்ற ஆசிரியர்களின் உண்மைக் கூலியில் ஓரளவு திருப்தி ஏற்படும். ஆசிரியர்களின் அந்தஸ்திலும் சமூகத்தில் உயர்ச்சி ஏற்படும்.

ஆசிரிய சேவை இலங்கையிலுள்ள நிர்வாக சேவை, கல்வி நிர்வாக சேவை போன்ற ஏனைய உயர்சேவைகளுக்குச் சமமான சமாந்தரமான சேவையாக உயர்த்தப்பட்டுள்ளது. எனவே எதிர்காலத்தில் ஏனைய சேவைகளுக்கு சம்பளம் உயரும் போது ஆசிரிய சேவையில் உள்ளவர்களுக்கும் சம்பளம் இயல்பாகவே கூடும்,

7 வருடம் முடித்த டிப்ளோமாப் பட்டம் பெற்ற பட்டதாரிக்கும் 10 வருடம் பயிற்றப்பட்ட ஆசிரியராகச் சேவையை முடித்தவர்களுக்கும் உதவிக் கல்விப் பணிப்பாளரின சம்பளத் திட்டம் வழங்கப்படவுள்ளது. அதே போல 17 வருட சேவையை முடித்த டிப்ளோமாப் பட்டம் பெற்ற பட்டதாரியும், 20 வருடம் பயிற்றப்பட்ட ஆசிரியராகச் சேவையை முடித்த ஆசிரியர்களுக்கும் பிரதிக் கல்விப் பணிப்பாளரின் சம்பளத் திட்டம் வழங்கப்படவுள்ளது.

இதனால் எதிர்காலத்தில் ஆசிரியர்கள் ஆசிரிய சேவையில் தொடர்ந்து இருந்து கொண்டே நிறைந்த சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு திருப்திகரமாக கல்விப் பணியைச் செய்யலாம்.

முதலாம் தரக் கல்விப் பணிப்பாளராக நாட்டில் 60 பேர் உள்ளனர். அவர்களுக்குச் சமமான சம்பளத்தில் 1995 முடிவதற்குள் 5000க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் பதவி உயர்த்தப்படுவார்கள். ஆசிரிய சேவையும் புதிய சம்பளத் திட்டமும் அமுலாகும் போது சகல கோட்டங்களிலும் உதவிக் கல்விப் பணிப்பாளர்களிலும் கூடிய சம்பளத்தைப் பெறும் பல நூற்றுக்கணக்கான மூத்த ஆசிரியர்கள் இருப்பார்கள். அதேபோல் மட்டக்களப்பு, திருமலை, கொழும்பு, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களில் கோட்டங்களுக்கு பொறுப்பான பிரதிக் கல்விப்பணிப்பாளரிலும் கூடிய சம்பளத்தை பல நூற்றுக்கணக்கான மூத்த ஆசிரியர்கள் பெறுவார்கள்.

இச்சம்பளத் திட்டமானது கல்வி நிர்வாகிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையேயான முரண்பாடுகள் எழும் தன்மையைக் குறைக்கும்.

தமிழர்களில் கடந்த காலங்களில் பெண்கள் கூடிய சம்பளமுடைய ஆண்களை திருமணம் செய்ய விரும்புவது மரபாகியிருந்து வந்துள்ளது. இந்நிலையும் எதிர்காலத்தில் மாறும். திருமணமாகாத பெண் ஆசிரியர்களுக்கு அவர்களிலும் கூடிய சம்பளமுடைய ஆண்களை தேடுவது சிரமமாகும் நிலை இச் சம்பளத் திட்டத்தால் உருவாகிறது. ஆகவே திருமணமாகாத பெண் ஆசிரியர்களும் தமது திருமண வாழ்க்கை தொடர்பான மனப்பாங்கை மாற்றிக் கொள்வது சிறந்ததும் தவிர்க்க முடியாததுமாகும் எனவும் தெரிவித்தார். (சி)

ஜனாதிபதி செயலகத்தில்

# சந்திரிகா கடமை

(கொழும்பு)

ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் உத்தியோகபூர்வமாக தமது கடமைகளை ஆரம்பித்தார்,

அரசாங்க தனியார் ஊழியர்களின் குறைபாடுகள் பற்றியும் மற்றைய விடயங்கள் பற்றியும் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக இம் மாதம் 20ம் திகதிக்கு முன் விசாரணைக்குழு ஒன்றை நியமிப்பதாகவும் ஜனாதிபதி செயலகத்துக்கு நேற்று முன்தினம் விஜயம்செய்த தொழிற்சங்கப் பிரதிநிதிகளிடமும் மற்றும் அரசாங்க நிறுவனங்களின் பிரதிநிதிகளிடமும் ஜனாதிபதி உறுதியளித்தார். -வி

அகில இலங்கை ரீதியில்

# யூனியன் கல்லூரி மாணவி முதலிடம் பெற்றார்

(உடுவில்)

ஹெல்பேஜ் ஸ்ரீலங்கா முதிர் விலுதவி நிறுவனம் இவ்வருடம் அகில இலங்கை ரீதியில் நடத்திய கட்டுரைப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவி சர்மிளா சண்முகலிங்கம் [ஆண்டு 12] முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

இக்கட்டுரைப் போட்டிக்கான முதற்பரிசு இரண்டாயிரம் ரூபாவையும் கல்வி உயர் கல்வி அமைச்சர் திரு. றிச்சட்பத்திரான விடமிருந்து அவர் பெற்றுக்கொண்டார்.

கொழும்பு-ஆனந்தாக் கல்லூரியில் அண்மையில் இதற்கான பரிசளிப்பு வைபவம் நடைபெற்றது. 1))

சந்தனமரக் கடத்தல்

# வீரப்பனால் இதுவரை 80 பொலிஸார் கொலை

(சென்னை)

சந்தன மரக்கடத்தல் வீரப்பன் இதுவரைக்கும் எண்பது பொலிசாரை கொலை செய்துள்ளதுடன் சந்தனக் கடத்தல், யானைகள் அழித்தல் என பல குற்றச் செல்களையும் புரிந்துள்ளார்.

திரு. வீரப்பன் உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் மற்றும் உறவினர்களை தான் கடத்திவைத்திருப்பதாக தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் தமது கடத்தல் குழுவினர் இவர்களைக் கடத்திவைத்திருப்பதாக தமிழக மற்றும் கர்நாடகமாநில காடுகளில் தலைமறைவாக இருந்துவரும் வீரப்பன் பேசிய ஒலிப்பதிவு நாடாவில் கூறியுள்ளார்.

இதேவேளை தாம் தலைமறைவாகவுள்ள சுற்றியுள்ள கிராமங்களில் உணவு சேகரிக்க தமக்கு அனுமதி வழங்கவேண்டுமென வீரப்பன் வேண்டுகோள் விடுத்துள்ளார். ரி

# இலங்கையுடன் புதிய ஒப்பந்தத்திற்கு அமெரிக்கா விரும்பவில்லை

(கொழும்பு)

வொய்ஸ் ஒவ் அமெரிக்கா விவகாரம் தொடர்பாக இலங்கை அரசுடன் புதிய ஒப்பந்தமொன்றை செய்ய அமெரிக்கா விரும்பவில்லை என அறிவிக்கப்படுகிறது.

இந்தப் பிரச்னை குறித்து இலங்கையுடன் பேச்சுக்களை நடாத்த தெற்காசியாவிற்கான முக்கிய அதிகாரி ஒருவரை இலங்கைக்கு அனுப்ப அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

இதேவேளை இலங்கைக்கும் அமெரிக்காவுக்குமிடையில் இது தொடர்பாக முன்னர் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் பல திருத்தங்களை செய்து புதிய ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திட இலங்கையின் புதிய அரசு முயற்சித்துவரும் இவ்வேளையில் இதனை அமெரிக்கா விரும்பவில்லையாம்.

வொய்ஸ் ஒவ் அமெரிக்கா விவகாரம் தற்போது மீண்டும் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. இந்த வானொலி நிலையம் 'ரணவில' பகுதியிலிருந்து அகற்றப்பட வேண்டுமென முன்னர் கோரி வந்த பொது மக்கள் தற்போது சில நிபந்தனைகளை அரசு ஏற்கும் பட்சத்தில் அதற்கு இணங்கத் தயாரெனவும் கூறியுள்ளனர்.

தற்போது பொதுமக்கள் அமைப்பு விதித்துள்ள நிபந்தனைகளை அமெரிக்க தரப்பினரால் ஏற்க முடியாதுள்ளதாம். -சி

## இரு பொலிஸ் பலி

(கொழும்பு)

அம்பாறைபகுதியில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதல் ஒன்றில் இரண்டு பொலிசார் கொல்லப்பட்டனர்.

காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது விடுதலைப்புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் இந்த இரண்டு பொலிஸாரும் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இ-ரி

## மரக்கறி வகைகள் விலை உயர்வு

[அரியாலை]

யாழ். சின்னக்கடை மரக்கறிச்சந்தையில் கிலோ 40 ரூபாய் வரை விற்ற மரக்கறி வகைகள் கிலோ 70 ரூபாய் வரை விற்கப்படுகின்றது. [59]

# சமூகத்தில் மக்கள் ஈடுபடும் நடவடிக்கையே அபிவிருத்தி- பேராசிரியர் பாலகிருஷ்ணன்

(யாழ்ப்பாணம்)

''அபிவிருத்தி என்பது சமூகத்தில் மக்கள் ஈடுபடுகின்ற ஒரு நடவடிக்கையாகின்றது. ஆகவே அங்கு சமூகப்பெறுமானங்கள் முக்கியமாகின்றன. அபிவிருத்தி பற்றி பேசுமிடத்து அது தொடர்பான பெறுமானங்கள்மீது பொருளாதார சமூக அரசியல்பண்பாடு சமய சார்பான செல்வாக்குகள் முக்கியத்துவம் பெறுவதை அறிய முடிகின்றது.''

யாழ். இந்துக்கல்லூரிகுமாரசாமி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற யாழ். இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் அமரர் ந. சபாரத்தினம் அவர்களது நினைவுப் பேருரை தொடரில ''அபிவிருத்தியில் கோட்பாடுகளும் பரிமாணங்களும் பெறுமானங்களும்'' என்னும் தலைப்பில் யாழ் பல்கலைக்கழகபொருளியற்றுறைத் தலைவர் பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன் பேருரை நிகழ்த்துகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விழாவில் பேராசிரியர் பாலகிருஷ்ணன் தொடர்ந்து உரையாற்றுகையில், அமரர் சபாரத்தினம் கடந்த 65 வருடங்கள் உடலாலும் உள்ளத்தாலும் யாழ். இந்துக்கல்லூரியுடன் தொடர்புடையவராவர். 1927ம் ஆண்டு யாழ் இந்துவில்மாணவராக தொடங்கிய இவரின்சேவை இணைப்பு ஆசிரியராக, துணை அதிபராக அதிபராக நிறைவெய்தியது.

'ஈழநாடு' தினசரியின் ஆசிரியராக இருந்த காலத்தில் இவர் எழுதிய ஆசிரிய தலையங்கத்தில் எழுத்தாற்றல் என்னைக் கவர்ந்தது. அவருடைய நினைவுப்பேருரையை நிகழ்த்துவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

அபிவிருத்தி என்பது சமூகத்தில் மக்கள் ஈடுபடுகின்ற ஒரு நடவடிக்கையாகின்றது; அபிவிருத்திகளை நியம நோக்கில் பார்க்கும் பொழுது எதை அபிவிருத்தி செய்வது எவ்வாறு அபிவிருத்தி செய்வது என்பதுடன் எவற்றைநோக்கி அதனை முன்னெடுத்துச் செல்வது என்பது வலியுறுத்தப்படுகின்றது. இவ்வாறு நியம நோக்கில் அணுகுவது அபிவிருத்தியின் குறிக்கோள்கள் பற்றிய விடயங்களும் முக்கியமாகின்றன. அடிப்படை இலக்குகள் பற்றி அபிவிருத்தியில் வரையறை செய்யும் முயற்சிக்குப் பின்னணியாக முக்கிய பெறுமானங்கள் தொடர்பாக ஒரு சமூக சார்பான நிலைப்பாடு இருத்தல் வேண்டும்.

தனி மனிதனையும் சமூகத்தையும் சமூகத்தில் தனிமனிதனின் இடம் பற்றியும் முன்னேற்றங்கள் பற்றியும் தொடர்பு கொள்ளும் விடயங்களாக இருக்கின்றன. சமூக நிலைப்பாடுகள் பற்றிக்கூறுமிடத்து அரசியல் சார்பான தொடர்புகளும் முக்கியமாகின்றன. அபிவிருத்தியில் சமூக நோக்கிலான இலக்குகளும் அவற்றிற்கு ஆதாரமான பெறுமானங்களும் நிலையானவையுமல்ல. அபிவிருத்தி இலக்குகளைப் பெறுமான அடிப்படையில் நோக்கும் பொழுது அவை சமூகத்தின் அடிப்படை இலக்குகளையும் நீண்டகாலத்துத்தன்மை கொண்டவையாக எடுத்துக் கொள்ளுதல் பொருத்தமாகும்.

மூன்றும் உலக நாடுகளில் அபிவிருத்தி ஒழுங்குபடுத்தப்பட்டும், வழிநடத்தப்பட்டும் வருகின்றது, இத்தகைய நிலையில் அரசாங்கத்தின் பங்களிப்பு முக்கியமானதாக இருப்பதை சந்தைசார்பானபொருளாதாரங்களிலும் காணமுடிகிறது. இப்பின்னணியில் சமூகரீதியாக அபிவிருத்தியின் அடிப்படை இலக்குகள் நிர்ணயிக்கப்படுபவை எனக் கருதமுடிகிறது. சமூகத்தவர் சார்பாக அரசாங்கம் நிலவக்கூடிய சமூகஇணக்கத்தின் அடிப்படையில் அபிவிருத்திப் பாதை பற்றியும் அபிவிருத்தி இலக்குகள் அபிவிருத்தியின் முக்கியமான வழிமுறைகள் பற்றியும் தீர்மானிக்க முடிகின்றது. இதற்கு ஒரு அரசியல் பின்னணியும் இருப்பதாகக் கருதலாம். -162-சி

## கடற்றொழில் கடனுதவி

]யாழ்ப்பாணம்)

போர்க்கால சூழ்நிலையில் பாதிப்புற்ற பாசையூர் மகளை ஊக்குவிக்குமுகமாக கடற்புலி மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஒரு பயனாளிக்கு 10,000-/வீதம் 51 பயனாளிகளுக்கும் 5,10,000 ருபாவை சுயதொழில் ஊக்குவிப்பு கடனாக வழங்கியுள்ளது.

## பஸ் நிலையத்தில் தபால் பெட்டி

]அரியாலை)

யாழ். மத்திய பஸ் நிலையத்தில் தற்பொழுது புதியதபால் பெட்டி ஒன்று வைக்கப்பட்டுள்ளது. கொழும்பிலிருந்து வருபவர்கள் அங்கிருந்து கொண்டு வரும் கடிதங்களை இப்பெட்டியில் போடுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. [59]

# எமது பிரதேசத்தின் நீர் வளத்தை பாதுகாக்க ஒத்துழைப்பு வேண்டும்

எமது தமிழீழத்தில் எந்தவொரு வளமும் பயனற்றவை அல்ல. அன்று காலனித்துவ நாடுகளின் ஆக்கிரமிப்புக்கள் சிறிலங்காவின் திட்டங்களையும் முயற்சிகளையும் மழுங்கடித்த காலகட்டம் வேறானது. ஆனால் இன்று தற்காலத்தில் அதாவது எமது சுதந்திரப் போராட்டம் ஆரம்பிக்கக் காரணமான சிறிலங்கா அரசின் எமது பிரதேச ஆக்கிரமிப்புக்கள், அடக்குமுறைகள் எல்லாமே மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்பட்ட காலகட்டத்தில் எமது விழிப்புணர்வும் வீறுடன் எழுந்தது. அந்த அடக்குமுறைகளில் ஒன்றுதான் பொருளாதாரத்தடை. ஆனால் இத்தடை வளங்கள் அற்ற பிரதேசத்தைத்தான் கட்டுப்படுத்த உகந்ததே தவிர எமது தமிழீழத்தைக் கட்டுப்படுத்தக் கூடியதல்ல.

இந்நிலையில்தான் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் சுயமாக தற்சார்புப் பொருண்மியத்தில் வாழ எதிர்பார்ப்புடன் இருந்த மக்களுக்கு அத்திவாரமாக அமைந்தது. அதன் செயற்பாடுகளும் முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கும் கைகொடுத்து உறுதுணையாக நிற்பவை தமிழீழ வளங்களே. எனவே காலாகாலமாக எமது தற்சார்புப் பொருண்மியத்திற்கு உந்துசக்தியாக இருக்கின்ற வளங்கள் பாதுகாக்கப்படுவதுடன் சிக்கனமாகவும் பாவனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

அந்த வகையிலே தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உட்கட்டுமானப் பகுதியின் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இம்முயற்சிகளில் ஒன்றுதான் நீர்வள பாதுகாப்பாகும். இந்த நீர்வள பாதுகாப்பு முயற்சிகள் ஆயிரத்தி தொளாயிரத்து தொண்ணூற்றிஓராம் (1991) ஆண்டிலிருந்து ஆரம்பமாகி இன்றுவரை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால் தற்போது நீர்வள பாதுகாப்பு முயற்சிகள் தீவிரமடைந்து செல்கின்றமைதான். இம்முயற்சிகளில்தான் துரித நீர்வள மேம்பாட்டுத் திட்டங்களும் உள்ளடக்கப்படும்.

நீர்வளப் பாதுகாப்பில் பல்வேறு முயற்சிகளும் செயற்பாடுகளும் அடங்கும். முதலில் நீர்வளத்தைப் பாதுகாக்க வேண்டுமெனின் அவ் நீர்வளத்தைக் கொண்டிருக்கின்ற நீர்நிலைகள் பராமரிக்கப்பட வேண்டும். இவை சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டாலே குறிக்கப்பட்ட சூாலகட்டத்தில் கிடைக்கின்ற மழைநீரைச் சேமித்துவைக்க முடியும். இந் நீர்நிலைகள் பராமரித்தல் எனகின்றபோது யாழ். குடாவைப் பொறுத்தவரையிலே குறைவாக உள்ளது. ஏனெனில் இங்கு நீர்நிலைகள் அதாவது தரைமேல் நீர்நிலைகள் என்பது சிறிதளவாகத்தான் காணப்படுகின்றது. ஆனால் இந்நீர்நிலைகளைப் பராமரிப்பது சிரமம் அற்றதாக சிறியதாக இருந்தாலும் இன்னுமொரு பாரிய வேலை காத்துக் கிடக்கின்றது.

அந்தவகையிலே யாழ். குடாநாட்டில் மேற்கொள்ள வேண்டிய பாரிய வேலையாவது நிலக்கீழ் நீரின் சேமிப்பை அதிகரிப்பதாகும். அத்துடன் உவர்நீரின் ஊடுருவல எமது பிரதேசத்தில் அதிகளவில் நடைபெறும் முன்னர் நாம் நன்னீர் வளத்தைப் பாதுகாக்க வேண்டும். இதனால் மழை கிடைக்கின்ற காலங்களில் மழைநீர் கடலைச் சென்றடைவதைத் தவிர்த்து, நிலக்கீழ் நீரை சேமித்து முயற்சிகளைத் தொடர வேண்டும். இம்முயற்சியால் எமக்குத் தேவையான நன்னீர் வளத்தை சேமிக்க முயல்வதோடு உவர்நீர் ஊடுருவதையும் தவிர்க்க முடியும்.

மேலும் வன்னிப் பெருநிலப்பரப்பை பொறுத்தவரையிலே இதன் புவியியல் அமைப்பு யாழ். குடாவைவிட வித்தியாசமானது. இங்கு யாழ். குடாவைப் போன்று நிலக்கீழ் நீரைத்தான் சேமித்துக் வைக்க வேண்டும். என்பதல்ல. இங்கு நிலத்தின் மேல்பெரும்பாலான நீர்த்தேக்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன எனவே இங்கு தொடரும் முயற்சிகள் என்கின்றபோது மழை நீரை எவ்வளவுக்த எவ்வளவு தேக்கிவைக்க முடியும் என்பதிலே நீர்வள பாதுகாப்பு முயற்சிகள் தொடர்கின்றன. இவ்வாறான முயற்சிகளை வன்னிப்பெருநிலப்பரப்பில் இருந்து ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்றியோராம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உட்கட்டுமானப் பகுதியால் நீர்வளங்களை பாதுகாக்க வேண்டும் என்ற திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன, அன்றைய காலகட்டங்களில் சிறிலங்கா அரசு தமது பிரதேசத்தின் நலன்களை மாத்திரம் கவனத்தில் கொண்டு தரிதமகாவலி அபிவிருத்தி, விக்டோரியா, ரந்தனிகல எனப்பல முன்னேற்றகரமான திட்டங்களை முன்வைத்து மேற்கொண்டது. ஆனால் எமது தமிழீழப் பிரதேசத்தின் நலன்களைக் கவனத்தில் கொண்டு எமது பிரதேசத்தில் எந்த விதமான முன்னேற்றகரமான திட்டங்களும் மேற்கொள்ளப்படவில்லை. இன்று சுயசார்புப் பொருண்மியம் என்பதில்லை. முன்னேறிக் கொண்டு இருக்கின்ற தமிழீழத்தில் துரித நீர்வள மேம்பாட்டுத்திட்டம் முன்வைக்கப்பட்டது இத்திட்டமானது எமது நீர்வளங்களைப் பாதுகாக்கின்ற செயற்பாடுகளாவும் முயற்சிகளாவும் அமைகின்றது.

எனவே எமது பிரதேசத்தின் நீர் வளத்தைப் பாதுகாக்க அனைத்துக் கரங்களும் ஒத்துழைக்கவேண்டும். இவ்வாறு ஒத்துழைப்புக்கிடைக்குமாயின் மென்மேலும் எமது பிரதேசம் செழிப்பின் உச்ச நிலையை அடைய முடியும்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

---

# "பெற்றோர், ஆசிரியரை மாணவர் மதிக்கப் பழக வேண்டும்"

— முன்னாள் அதிபர் அறிவுரை

(பண்டத்தரிப்பு)

''எமது மாணவர்கள் கல்வியில் மாத்திரம் ஈடுபாடு கொள்வதுடன் நின்றுவிடாது தங்கள் பெற்றோர்கள், ஆசிரியர்களை மதித்து கௌரவிக்கும் பண்பையும் பெற்றவர்களாகவும் மிளிர வேண்டும்.''

இவ்வாறு பானிப்பாயில் இடம்பெயர்ந்து இயங்கிவரும் இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற மாதா, குரு, தெய்வ வழிபாடு நிகழ்ச்சியில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய ஓய்வுபெற்ற சுன்னாகம் இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம் குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் சு. செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் க. பொ. த. சாதாரண தர பரீட்சையில் தோற்றும் 82 மாணவர்கள தங்கள் பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஆகியோரை வணங்கி ஆசிபெற்றனர். இந்த வைபவத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வயலம் II பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. சி. கோ. வேலாயுதம் உரையாற்றுகையில்; பாடசாலைகளில் மாதா பிதா ஆசிரியர்கள் ஆகியோரை வணங்கி ஆசிபெறுவதன் மூலம் மாணவர்கள் பரீட்சைகளில் சித்திடைவதற்கான ஆன்மீக சக்தியை பெற்றுகொள்ள முடியும் என்றும் ஆசிரியர்களை மதித்து போற்றும் பண்பு மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பேருதவியாக அமையும் என்றும், குறிப்பிட்டார். மானிப்பாய் மெமோறியல் ஆங்கில கல்லூரி அதிபர் அ, மு. அருணசலம், மானிப்பாய் கிராம அலுவலர் திரு. எஸ். சிவகுமாரன் ஆகியோரும் உரையாற்றினர்கள். 72-ரி

---

க. பொ. த. [சா/த]

# தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பரீட்சை எடுக்கவில்லை

(உடுவில்)

க. பொ. த. (சா/த) பரீட்சைக்கு பரீட்சாத்தியாக தோற்ற விண்ணபபித்திருந்த பலபாடசாலைமாணவர்கள் பரீட்சைக்குத்தோற்றுதுதிரும்பிச் சென்றனர்.

பல பரீட்சார்த்திகள் பரீட்சைகு சமூகமளிக்காத போதிலும் பரீட்சை மண்டபத்திற்கு பரீட்சை எழுதுவதற்கென வருகைதந்த பலமாணவர்கள் பரீட்சை மேற்பார்வையாளர்களின் அறிவுறுத்தலுக்கமைய பரீட்சையை எழுதாமல் திரும்பிச் சென்றதை காணமுடிந்தது.

யாழ்ப்பாணம் கல்விவலயம் இரண்டின் கல்விப் பணிப்பாளர் பரீட்சை மேற்பார்வையாளர்கள் கலந்துகொண்ட அறிவுறுத்தல் கூட்டத்தின் போது ஆண்டு 9, 10 பயிலும் பாடசாலைமாணவர்கள் தனிப்பட்ட பரீட்சார்த்தியாக பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்க வேண்டாமென அறிவுறுத்தியதைத் தொடர்ந்து பரீட்சை மண்டபத்தில் பரீட்சை ஆரம்பமாவதற்குமுன் பரீட்சை மேற்பார்வையாளர்கள் விடுத்த அறிவிப்பைத் தொடர்ந்து பலமாணவர்கள் பரீட்சை மண்டபத்தைவிட்டு தாமாகவே வெளியேறினர்.

மேலும் தனிப்பட்ட பரீட்சார்த்தியாக விண்ணப்பித்த பலர் இம்முறை பரீட்சைக்கு தோற்றவில்லை என்பதும குறிப்பிடத்தக்கது. 109

---

## விவசாய பீடத்திற்கு 12 மாணவர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

1993/94 கல்வியாண்டிற்கு வெற்றிடங்களை நிரப்புவதற்கு விவசாயபீடத்திற்கும் 12 மாணவர்களுக்கு அனுமதி கிடைத்துள்ளது. அனுமதிக் கடிதங்கள் கிடைக்கபெற்ற மாணவர்கள் யாழ். பல்கலைக் கழக தேர்வுகளும் அனுமதிகளும் கிளையில் தங்கள் பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றார்கள். -சி

---

# தமிழ் இலக்கியம் போதிக்க ஏற்பாடு

(உடுவில்)

அரசாங்க பாடசாலைகளில் அடுத்த ஆண்டிலிருந்து தமிழ் இலக்கியபாடம் ஆண்டு 9, 10, 11 களில் விருப்பத்துக்குரிய பாடமாக போதிக்கப் படுவதற்கு கல்வித்திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

ஏற்கனவே சிங்களம், ஆங்கிலம் போன்ற மொழி இலக்கியங்களை விருப்பத்துக்குரிய பாடமாக பாடசாலைகளில் போதிக்கப்படுவதுபோல தமிழ் இலக்கிய பாடமும் அடுத்த ஆண்டில் இருந்து பாடசாலைகளில் போதிக்கவும், அடுத்த ஆண்டு பதினொராம் ஆண்டில் கல்வி பயில்பவர்கள் டிசம்பரில் நடைபெறும் க. பொ. த. சாதாரண தர பரீட்சைக்கு இப்பாடத்துக்கு தோற்ற அனுமதிக்கப்படுவர்கள் எனவும் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இப்பாடத்தை போதிப்பதற்கு வேண்டிய இலக்கிய நூலை உருவாக்குவதற்குத் தேவையான பாடப்பகுதிகளை தெரிவுசெய்யும் வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. அடுத்த ஆண்டு பாடசாலைகள் ஆரம்பமாகியவுடன் பாடநூல்கள் தயாரித்து அச்சடிக்கப்பட்டு விநியோகிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. 109

---

# அரசியல்பழிவாங்கல் மூலம் பாதிக்கப்பட்ட ஊழியர்க்கு நிவாரணம்

(கொழும்பு)

1977-ம் ஆண்டு முதல் அரசியல் ரீதியில் பழிவாங்கப்பட்ட ஊழியர்களுக்கு அரசாங்கம் நிவாரணங்களை வழங்கும்,

அரசியல் பழிவாங்கல் தொடர்பாக கல்வி உயர்கல்வி அமைச்சின் தொடர்புடைய நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களிடமிருந்து 15 ஆயிரத்துக்கும் அதிகமான விண்ணப்பங்கள் அரசாங்கத்துக்கும் கிடைத்துள்ளன.

இவர்களின் விண்ணப்பங்கள் குறித்து ஆராய்வதற்காக அரசு இரண்டு குழுக்களை நியமித்துள்ளது.

உயர்கல்வி பிரதியமைச்சர் பேராசிரியர் விஸ்வவர்ணபால முதலாவது குழுவுக்கும், பிரதிக்கல்வி அமைச்சர் எம். டயிள்யூ எச். செனவிரத்ன இரண்டாவது குழுவுக்கும் தலைமை தாங்குகின்றார். -இ

---

# முஸ்லிம் காங்கிரசை நசுக்க சதி முயற்சி

— அஷ்ரப் குற்றச்சாட்டு

(கொழும்பு)

முஸ்லிம் சமய கலாச்சார அலுவல்கள் திணைக்கள விவகாரத்தை மையமாக வைத்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசை நசுக்கவும் அரசுக்குள் பிளவை ஏற்படுத்தவும் சதிமுயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக அமைச்சர் எம். எச் எம். அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் இது பற்றி கூறுகையில்; இந்த சதி வலைக்குள் நாங்கள் சிக்கக் கூடாது, எம்மை ஆத்திரமடையச்செய்து அரசுக்கான ஆதரவை நீக்கும் வகையில் எம்மை தூண்ட தீயசக்திகள்முயல்கின்றன.

இந்நிலையில் நாங்கள் அவதானமாக இருக்கவேண்டும். இவ்விடயத்தில் எமது கட்சி நிலைப்பாடு குறித்து நான் ஜனதிபதி சந்திரிகாவுடன் விரிவாக பேச்சுக்களை நடாத்தியுள்ளேன் எனவும் தெரிவித்துள்ளார். சி-இ

---

# சகல தபாலகங்களுக்கும் 'பாக்ஸ்' வசதி

(கொழும்பு)

நாட்டில் உள்ள சகல தபாலகங்களிலும் 'பாக்ஸ்' வசதி ஏற்படுத்திக்கொடுக்கப்படவுள்ளதாக தபால் தொலை தொடர்புகள் அமைச்சின் அதிகாரி ஒருவர்தெரிவித்தார்.

அதிகாரி மேலும் தெரிவிக்கையில்; தற்சமயம் 125 தபாலகங்களிலும் இவ்வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அடுத்த ஆறு மாதங்களில் 50 தபாலகங்களில் இவ்வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

தனியார் தபால் நிலையங்களில் 'பாக்ஸ்' சேவைக்காக அறவிடப்படும்கட்டணத்தைவிட அரச தபாலகங்களின் இச் சேவைக்கான கட்டணம் குறைவாக இருக்கும் என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது. -த

### மணிவாக்கு

இரத்த பந்தமில்லாதவர்களேயே கதறி அழவைக்கும் அற்புத மரணம் ஒருவருக்கு வாய்க்கிறதென்றால் அவர் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர் என்று பொருள்.

- கண்ணதாசன்

# ஐ. நா.வின் அறிக்கையினுல் தான் இலங்கை தமிழ் அகதிகளுக்கு ஆபத்து

(பாரிஸ்)

ஐக்கிய நாடுகள் ஸ்தானிகராலயம் போன்ற அகதிகளுக்கு உதவிவரும் அமைப்புகள் இலங்கையில் அகதிகள் திரும்பிச் செல்லக் கூடிய சூழ்நிலை இருப்பதாக அறிக்கைகள் விடுவதனுல்தான் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்ப அந்தந்த நாடுகள் முயற்சி செய்கின்றன.

இவ்வாறு இனவெறி நடவடிக்கைக்கு எதிரான 'காஸ்ற்ஸ்' என்ற இயக்கத்தின் தலைவி செல்வி மக்கொலன்ஸ் அண்மையில் பாரிஸில் நடந்த 'போரும் சமாதானமும்' என்ற கருத்தரங்கில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அங்கு அவர்மேலும் பேசுகையில்: பிரிட்டன் கடந்த ஆண்டு 80 வீதமான தமிழ் அகதிகளை ஏற்றுக்கொண்டது. ஆனுல் இத்தொகை இப்போது 20சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. இதற்கெல்லாம் காரணம் அகதிகளுக்கு உதவிவரும் ஐ. நா. ஸ்தாபனமே. அதுமட்டுமல்ல சில நாடுகள் அகதிகள் வாழும் நாடுகளில் மனித உரிமைகளை மறுத்தும் வருகின்றன.

தமிழ் மக்களின் இன்றைய நிலைக்கு பிரிட்டன் அரசும் ஒரு காரணியாகவுள்ளது என்பது உண்மை. இலங்கைக்கு வெளிநாடுகள் அளித்துவரும் உதவிகளே அங்கு நடைபெறும் யுத்தத்திற்கு ஊக்கம் அளித்து வருகிறது. தமது 16 வயதில் இலங்கைத் தமிழ் மக்கள் எவ்வாறு சித்திரவதை செய்யப்படுகிருர்கள் என்பதை நான் அறிந்து வைத்துள்ளேன். தமிழருக்கு அந்த நாட்டு அரசு நடத்திய கொடுமைகள் தமிழ் மக்கள் மீது எனக்கு இரக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

1947 ல் அயர்லாந்து மக்களின் சுதந்திர தாகத்தை அடக்குவதற்காக அயர்லாந்தில் தங்களது ஆதிக்கத்தை செலுத்துவதற்காக பிரிட்டன்பயங்கரவாதச் சட்டத்தை கொண்டு வந்தது போன்றது தான் 1976 ல் தமிழ் மக்களின் சுதந்திர போராட்டத்தை நசுக்குவதற்காக கொண்டுவரப்பட்ட சட்டம்.

பிரிட்டிஷார் வெளியேறிய போது சொல்லிக்கொடுத்த திட்டங்களைத்தான் இலங்கை அரசும் செய்துகொண்டிருந்தது. தென்னுபிரிக்காவில் விடுதலைப் போராட்டம் நடத்தியவர்களை பயங்கரவாதிகள் என்று இப்போது கூறுவதில்லை கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக வெள்ளையரால் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிரான கறுப்பின மக்கள் போராடியதினுல்தான் இன்று தமக்கென ஒரு நாட்டைப் பெற்றுக் கொள்ளமுடிந்தது.

அயர்லாந்து மக்களின் போராட்டமும் இது போன்றதே. இந்த போராட்டங்களினுல் மக்கள் பயனடைந்ததைக் காண்கிறோம் எனவும் கூறினுர். (சி

## நமது நோக்கு

### அறிவிப்புகள் சமாதானமல்ல!

அண்மைக் காலமாகப் பல பரபரப்பான அறிவிப்புகள் செய்திகளாக வருகின்றன. அவற்றின் ஆழநீளத்தை அறியாத சில பொதுமக்கள் பரம சந்தோஷமடையவும் கூடும்.

இந்த அறிவிப்புகள் முறையாக நடைமுறைப் படுத்தப்பட்டு, உண்மையான யுத்தநிறுத்தம் ஏற்பட்டு, கௌரவமான தீர்வு காணப்படுவதே சமாதானத்தை ஏற்படுத்தும்.

முன்பும் - இப்படிப் பல பரபரப்பான செய்திகள் வந்தன; பல தூதுகோஷ்டிகள் வந்தன; இதோ பேசித் தீர்க்கிறோம் என்று போனுர்கள்; போனவர்கள் போனவர்கள்தான்!

அமைதிபற்றிப் பாடிய கீதங்கள் பல, காற்றினிலே வரும் இனிய கீதங்களாக இருந்து, பின்னர் காற்றோடு போன கீதங்களாக மாறியதை மக்கள் மறக்கமாட்டார்கள்.

பாப்பரசர் வருகையுடன் யுத்தநிறுத்தம் வருவதும், பாதை திறப்பதும் வரவேற்கக் கூடியதே.

ஆனுல் - அவை நிரந்தரத் தீர்வுக்கு இட்டுச் செல்லும் பாதைகளாக அமைய வேண்டும்.

அரச படைகள் விலகாது அப்படியே நிற்க, ''நாம் நல்லவர்கள்; ஒன்றும் செய்ய மாட்டோம்; சும்மா பார்த்துக்கொண்டுதான் இருப்போம்!'' எனக் கூறிக்கொண்டு நிற்க, ஓரிரு நாட்கள் மக்கள் கொழும்பு போய்வருவதற்காகப் பாதை திறக்கப்படுமாயின் அது சமாதான முயற்சியல்ல.

தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்னைகளில் ஒன்று சுய பாதுகாப்பு. எமது பகுதியிலே நாம் சுதந்திரமாக, எவ்வித தலையீடுமின்றி, பயமின்றி நடமாட வேண்டும்.

இவற்றையெல்லாம் நாம் எண்ணிப் பார்க்காது, ''பாதை தெரியுது பார்!'' என எவரும் காட்ட முனைந்தால் ஏமாந்துவிடக் கூடாது.

''கணுதைக் கண்டானும் தான் கண்டவாறு'' என்ற ரீதியிலே வரும் விமர்சனங்களை அப்படியே ஏற்று ஏமாருது மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்.

அதேவேளை - கிடைக்கும் நல்லெண்ண வாய்ப்புகளை நழுவவிடாது, அறிவிப்புகளை இதய சுத்தியோடு நடைமுறைப் படுத்தி சமாதானச் சூழலை அரசு ஏற்படுத்தும் என நம்புகிறோம்!

## பலதும் பத்தும்

### மூளைக்கு வேலை!

கேள்வி (1) தமிழர்களின் இன்றைய சிந்தனைப் போக்கு என்ன? இதுபற்றிச் ''சற்றடே ரிவியூ'' வின் முன்னுள் ஆசிரியர் எஸ். சிவநாயகம் 'சண்டே லைப்சேவரில்' கட்டுரை எழுதினுர். இது.. தற்போது களத்தில் நின்று போராடுபவர்களுக்குச் சார்பாக அமைந்து விட்டது; விடுதலையை அதிகம் வலியுறுத்தியது. அதற்கு எதிராக லோகேஸ்வரன் கேதீஸ்வரன் கட்டுரை எழுதினுர்.

மீண்டும் சிவநாயகம் அதற்கு மறுப்புக் கட்டுரையைக் காரசாரமாக எழுதினுர். இந்தப் பத்திரிகையாளர் எந்த நாட்டுச் சிறையில் வாடிக்கிடந்தார்.

கேள்வி (2) அரச சார்பான கொழும்புப் பத்திரிகையில் இராணுவத் தீர்வின் கேடுகளை விவரித்தார் ஓர் கட்டுரையாளர், சமாதானத் தீர்வு சரிவராவிடில் இராணுவத் தீர்வுதான் எனக் கூறிய பிரதான அமைச்சரையும் கண்டித்தார் அக்கட்டுரையாளர். அப்படிக் கூறிய பிரதான அமைச்சர் யார்,

—மயூரன்

## இராசி பலன்

08 - 12 1994

வியாழக்கிழமை

(தமிழுக்குகார்த்திகை22)

ஷஷ்டி, இரவு 8-20 வரை, அவிட்டம் நள்ளிரவு 12-32 வரை, இராகு காலம்பி. பகல் 1-47 முதல் 3-14 வரை, சுபவேளை மாலை 3-04 முதல் 4-05 வரை, சித்தயோகம், ஷஷ்டி விரதம்.

மேடம்: காரிய சாதனை, பணவரவு, மகிழ்ச்சியான நிலை,

இடபம்: சத்துருஜெயம், பொருள் லாபம், மதிப்பு.

மிதுனம்: உடல் நிலைபாதிப்பு, பிதாதுயர், அலைச்சல்.

கடகம்; மனக்கவலை, திருமணபங்கம், பணமுடை

சிங்கம்: பெண் லாபம், கௌரவம், தாயன்பு.

கன்னி; நண்பர் உதவி, நோய் குணமாதல், விவாதம்.

துலாம்: பதட்டமடைதல், தொழில் குறைவு, மனச்சுமை.

விருச்சிகம்: உறவினர் தொல்லை, நம்பிக்கைமோசம், வேதனை.

தனுசு: வெகுமானம், தொழில் சிறப்பு, அதிகாரம்;

மகரம்: கலகவார்த்தை, சோம்பல், அகாலஉணவு.

கும்பம்: வருவாய் அதிகரிப்பு, கல்வியில் சிறப்பு பயணம்.

மீனம்; மனச்சஞ்சலம், தடுமாற்றம், துரோகம்.

ஜோஸ்யர்

# "சலரோகத்தினுல் உடல், உளரீதியாக பாதிப்பு ஏற்படும்"

## கருத்தரங்கில் உரை

(உடுவில்)

எமது உணவு முறைகள், பழக்க வழக்கங்களினுலேயே அதிக நோய்கள் ஏற்படுகின்றன.

சுன்னுகம் லயன்ஸ் கழகம் நடாத்திய சலரோகம் பற்றிய கருத்தரங்கில் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் வீ. சிறீகாந்தா மேற்கண்டவாறுகூறினுர்.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்துடன் இணைந்து லயன்ஸ் கழகம் மருதனுர் மடம் விவசாய நிறுவனத்தில் நடத்திய இக்கருத்தரங்கிற்கு திரு. வை, இராசையா தலைமை வகித்தார்.

சமூக சுகாதாரமும், வைத்திய ஆலோசனைகளும் பற்றி திரு. சிறீகாந்தா உரையாற்றுகையில மேலும் கூறியதாவது:-

சலரோகத்தைக் கட்டுப்படுத்தாதுவிடின் இன்றுஇருப்பதைப்போல இருமடங்காக இன்னும் பத்து வருடத்தினுள் அதிகரித்துவிடும்,

சலரோகத்தினுல் பாதிக்கப்படின் உடல், உளரீதியாகவும் சமுதாயரீதியாகவும் பல பாதிப்புக்கள் ஏற்படும். நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் ஆறு மாதத்துக்கொரு முறை சலம், இரத்தம் ஆகியவற்றை சோதித்துக் கொள்ள வேண்டும்.

சலரோகத்தின் பெருக்கத்திற்கு மக்களின் பங்களிப்புக் குறைவும் ஒருகாரணமாகும். குறித்த அளவு உணவை எடுக்கவேண்டும். மருந்துகளை எடுக்கவேண்டும், வைத்தியசாலை நாளில் சென்று பரிசோதிக்க வேண்டும்.

உடுவில் பொது சுகாதார பரிசோதகர் திரு. என். புவனேஸ்வரன் சலரோகமும், உணவுக் கட்டுப்பாடும் என்ற விடயம் பற்றியும் சுகாதார கல்வி உத்தியோகத்தர் கே. வைத்தீஸ்வரன் சலரோகத்தின் கட்டுப்பாட்டில் வைத்தியக் கல்வி முறை என்றவிடயம் பற்றியும் கருத்துரை வழங்கினுர்.

கருத்தரங்கிற்கு வந்தவர்களுடைய சலப் பரிசோதனைகள் இலவசமாக மேற்கொள்ளப்பட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (109-ரி)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994–12–08

வியாழன் இரவு

| | |
|---|---|
| 08-01 | சொல்லுங்கள் பார்க்கலாம் |
| 08-10 | சித்தமருத்துவக் குறிப்புகள் |
| 08-20 | உழைப்போம் உயர்வோம் நிகழ்ச்சியில் ''கரைசேரும் படகுகள்'' குறுநாடகம் |
| 08-30 | செய்திகள் |
| 08-40 | ஏட்டிலிருந்து அயர்லாந்து 800 ஆண்டு விடுதலைப்போர் என்ற நூலிலிருந்து ''இன்றையநிலைமை'' எனும் கட்டுரையின் சில பகுதிகள் |
| 08-50 | மலரும் மொட்டுக்கள் |
| 09-00 | இரவு நிகழ்சிகள் யாவும் நிறைவுபெறும் |

1994–12–09

வெள்ளி காலை

| | |
|---|---|
| 07-02 | மாவீர வணக்கம் |
| 07-15 | மணியாரம் |
| 07-30 | செய்திகள் |
| 07-35 | பத்திரிகைச் செய்திகள் |
| 07-40 | தாயகப்பாடல்கள் |
| 08-00 | காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும் |

### இலங்கைத்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பிலும், நாட்டின் ஏனைய பகுதிகளிலும் நடாத்தப்பட்டுவரும் வெடிகுண்டுத் தாக்குதல்களால் இலங்கை அரசியல் தலைவர்கள் கொல்லப்பட்டு வருகிருர்கள். இவற்றைத் தடுக்கமுடியாத நிலையில் இலங்கைப் படையினர் இருப்பதால் இதனை நிவர்த்திக்க இந்தியாவின் உதவியை நாடுவதென, இலங்கை அரசு அண்மையில் முடிவு செய்தது.

இதையடுத்து இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள இலங்கை வெளியுறவு அமைச்சர் திரு. லஷ்மன் கதிர்காமர், இலங்கைத் தலைவர்களின் பாதுகாப்புக் குறித்து இந்திய அதிகாரிகளுடன் விரிவான பேச்சுக்களை நடாத்தியுள்ளார்.

இந்தப் பேச்சுக்களின்போது இலங்கைத் தலைவர்களுக்குச் சிறப்பான முறையில் பாதுகாப்பு வழங்குவதற்காக இலங்கையில் சிறப்புக் கமாண்டோ படையை அமைப்பதெனவும் அதற்கு இந்தியப் படைகள் விசேட பயிற்சிகளை வழங்கும் எனவும், இந்தக் கமாண்டோ படைப் பிரிவு இந்தியப் படையின் உதவியுடன் அமைக்கப் படுமெனவும் இரு தரப்பினரும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இந்தப் படைப் பிரிவு விரைவில் அமைக்கப்பட்வுள்ளதாகவும் தெரிவிக்கப்பகிறது. -சி

### கொழும்பில்

போது'வேய்ரெக்ஸ்' தொழில் சாலைக்கு திருப்பப்பட்ட சமயம் மற்றுமொரு வான் அதன் பாதையை தடைசெய்து வாகனத்தை நிறுத்தியது, வாகனத்திலிருந்தவர்களை துப்பாக்கி காட்டி மிரட்டிய ஆயுதபாணிகள் அவர்களை கீழே இறக்கி அவர்களிடமிருந்த ரூபா 76 லட்சம் அடங்கிய பிரீவ்கேஷ்களை துப்பாக்கி முனையில் கொள்ளையடித்துக் கொண்டு தாம் வந்த வாகனத்தில் தப்பிச் சென்று விட்டனர்.

இத்துணிகரச் சம்பவம் நடைபெற்றபோது பெருமளவு பொதுமக்கள் சம்பவத்தை நேரில் பார்த்துள்ளனர். எனினும் எவரும் கைது செய்யப்படவில்லை பொலிஸார் விசாரணைகளை நடாத்தி வருகிருர்கள். -கே ரி

## கோழிப்பண்ணையில் திருட்டு

(பளை)

வரணிப்பகுதியில் உள்ள ஒரு கோழிப்பண்ணையில் கடந்த சில தினங்களில் முப்பது கோழிகள் வரை திருட்டுப் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (156)

### இந்தியாவில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மன் கதிர்காமர் கேட்டுள்ளார்.

சார்க் மாநாட்டிற்காக திருமதி சந்திரிகா இந்தியா செல்வதை பயன்படுத்தி அங்கு வைத்துயாரும் அவரை தாக்கலாமென்ற அச்சம் இருப்பதாலேயே திரு. லக்ஷ்மன் கதிர்காமர் இதுகுறித்து விஷேடமாக இந்திய அதிகாரிகளிடம்கேட்டுள்ளாராம்.

அண்மையில் கிராண்ட்பாஸில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து ஜனுதிபதி சந்திரிகாவின் பாதுகாப்புதீவிரப்படுத்தப்பட்டுள்ள இவ்வேளையில்இந்தியாவும் அவரது பாதுகாப்பிற்கு மிகுந்தமுக்கியத்துவம் வழங்க வேண்டுமென்பதற்காக திரு. லக்ஷ்மன் கதிர்காமர் இதுகுறித்து இந்திய அதிகாரிகளுடன் பேச்சுக்களையும் நடாத்தியுள்ளார். சி

மழைநீரை சேமித்து வைப்பாய்–என்றும்
மண்வளம் செழிக்க நிமிர்ந்து நிற்பாய்

# இலங்கைக்கு 275 இஸ்ரேல் கமாண்டோக்களை அனுப்பி பிரபாகரனைப் பிடிக்கவும்

— சுப்பிரமணிய சுவாமி கோருகிறார்

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் தலைவர் திரு.வே பிரபாகரனை பிடித்து இந்தியாவுக்குக் கொண்டுவர, 275 இஸ்ரேலியக் கொமாண்டோக்களை ஈழத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும்.

இவ்வாறு ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியசுவாமி, சென்னையில் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில அவர் மேலும் கூறுகையில்;

திரு. பிரபாகரனை கைது செய்து இந்தியாவுக்குக் கொண்டு வருவதற்கு, இந்திய அரசு இலங்கை ஜனதிபதி சந்திரிகாவிடம் உதவி கேட்ட போது அதற்கு ஒத்துழைக்க அவர் மறுத்துவிட்டார்.

தமிழகத்தில் உள்ள திராவிடக் கட்சிகள் அதுவும், கருணாநிதியின் தி.மு.க. உட்பட, பிரபாகரனை இந்தியாவுக்கு அனுப்பவேண்டும் என்று போராடாதது கண்டிக்கப்படவேண்டிய விடயமாகும் எனவும் கூறியுள்ளார். -சி

# காலாவதியான 'ரின்பால்' பறிமுதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் உள்ள ப நோ. கூ. சங்கக் (திவகம்) கிளை ஒன்றில், காலாவதியான ரின்பால் விற்பனை செய்துவந்தமையை தமிழீழ சுகாதாரப் பகுதியினர் தமது திடீர்ப் பரிசோதனையின்போது கண்டுபிடித்துள்ளனர். மேலும் அக்கிளையில் விற்பனைக்காக இருந்த ஏனைய கட்டிப்பால் தொகுதியை மேல் விசாரணைக்காகப் பறிமுதல் செய்துள்ளனர்

எனவே பொதுமக்கள் தமக்குத் தேவையான உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்யும்போது, பாவனைத் திகதியைப் பார்த்து அவதானமாகக் கொள்வனவு செய்யுமாறு தமிழீழச் சுகாதாரப் பகுதியினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். -சி

# போலி வேலைவாய்ப்பு முகவர் நிலையம் கொழும்பில் பிடிபட்டது

மூன்று தமிழ் இளைஞர்கள் கைது

(கொழும்பு)

புறக்கோட்டை சுசரிதபுரவில் மேல்மாடி வீடொன்றில் நடத்தப்பட்ட போலிவேலைவாய்ப்பு முகவர் நிலையமொன்றை வாழைத்தோட்டப் பொலிசார் கண்டுபிடித்துள்ளனர்.

பொலிசார் அங்கிருந்துவெளிநாட்டு அமைச்சு உட்பட பல அரசாங்க ஸ்தாபனங்களின் உத்தியோகபூர்வ இலச்சினைகளும், பல சான்றிதழ்களையும் கண்டுபிடித்துள்ளார்கள், இதுதொடர்பாக 3 தமிழ் இளைஞர்கள் உட்பட நான்கு சந்தேகநபர்கள் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அரசாங்க உயர் அதிகாரிகள், அரசாங்க அதிபர்கள், வழக்கறிஞர்கள் பயிற்சி ஆணையாளர், கிராம அதிகாரிகள் ஆகியோரின் போலி றபர் முத்திரைகளைப் பயன்படுத்தி, இந்த வேலைவாய்ப்பு முகவர் நிலையம் பரீட்சைச் சான்றிதழ் அடையாளஅட்டை, என்பனவற்றை வழங்கிவந்துள்ளது. மோட்டார் சாரதி அனுமதிப் பத்திரம், சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரம் என்பனவும் வழங்கப்பட்டிருப்பதாக வாழைத்தோட்டப் பொலிசார் மேலும் தெரிவித்தனர். -ம-சி

# சீனியின் விலை அதிகரிக்கப்படாது

(கொழும்பு)

ஒரு கிலோ சீனியின் விலை இரண்டு ரூபாவினல் அதிகரிக்கப்படப்போவதாக பரப்பப்பட்ட வதந்தி பொய்யானது என்று கூட்டுறவு மொத்த ஸ்தாபனத் தலைவர் தெரிவித்துள்ளார்.

கூட்டுறவு மொத்த ஸ்தாபனம் ஒரு கிலோ சீனியை 29 ரூபா 50 சதத்துக்கு விற்பனை செய்கின்றது. தற்போதைக்கு சீனியின் விலை அதிகரிக்கப்படமாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது கொழும்பிலும் சீனிக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. -ம-சி

# அரச ஊழியர்க்கு சம்பள உயர்வு

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கு விரைவில் சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

அரச ஊழியர்களிடையே தற்போது நிலவும் சம்பள முரண்பாட்டை நீக்கும் வகையில், 'தேசிய சம்பள ஆணைக்குழு' நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழு அரச ஊழியர்களுக்கான புதிய சம்பளத் திட்டத்தைச் சிபார்சு செய்யவுள்ளது.

புதிய சம்பளத் திட்டம் அமுலுக்கு வரும்போது, இலட்சக்கணக்கான அரச ஊழியர்கள் பல நன்மைகளைப் பெறுவர் எனவும் அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. -சி

# இன்றும், நாளையும் தபால்களைப் போடலாம்

கோமாரியில் செல்லும்

(யாழ்ப்பாணம்)

'கோமாரி' கப்பல் மூலம் அனுப்பப்படும் கடிதங்களுடன் சேர்க்கப்படுவதற்காகக் கடிதங்களை அனுப்ப விரும்பும் பொதுமக்கள், தங்கள் கடிதங்களைத் தங்கள் வதிவிடங்களுக்கு அண்மையிலுள்ள அஞ்சல் அலுவலகங்களில் இன்றைய (வியாழன்) தபாலில் சேரக்கூடியதாக அஞ்சலிடுமாறு கோரப்படுகின்றனர்.

பிரதம அஞ்சல் அலுவலகத்திலுள்ள அஞ்சல் பெட்டியில் நாளை வெள்ளிக்கிழமை காலை 8-00 மணிக்கு முன்னர் கடிதங்களைச் சேர்க்கலாம்

கடந்த மூன்று வாரங்களாகச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினல் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த 'பிளாம்பயன்' கப்பல் மூலம் அனுப்பப்பட்டு வந்த தபால் சேவை, சீரற்ற காலநிலை காரணமாகத் தடைப்பட்டிருந்தது. இக்காலப் பகுதியில் சேர்க்கப்பட்ட அனைத்து அஞ்சல் பொருட்களும் 'கோமாரி' கப்பலில் அனுப்பப்படுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. -சி

# சிங்களவராக மாறும் தமிழ் பெண்கள்!

(கொழும்பு)

கொழும்பு செல்லும் தமிழ்ப் பெண்களில் பலர், தமது கலாசாரத்தை மறந்து சிங்களக் கலாசாரத்தைப் பின்பற்றி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் தமிழர்கள் பெருமளவில் வசிக்கும் பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை, கொட்டாஞ்சேனை, தெஹிவளைப் பகுதிகளில் வசிக்கும் தமிழ்ப் பெண்கள் நெற்றியில் பொட்டு இடுவதில்லை. மேலும் உடை அலங்காரத்திலும் மாற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் தமிழ் பேசும் இவர்கள், பாதுகாப்புக் காரணங்களுக்காக இவ்வாறு தம்மை மாற்றிகொள்கிறார்களா? அல்லது நாகரிகத்திற்காக இப்படி மாறுகிறார்களா என்பது தெரியவில்லை எனவும் கூறப்படுகின்றது. -சி

### பாதை திறப்பது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அந்தச் செய்தி தெரிவித்தது.

மேற்படி இரு பாதையிலும் எதனை திறந்தாலும் அந்தந்த பகுதிகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் அங்கிருந்து விலக்கப்படமாட்டார்கள் எனவும் கூறப்படுகிறது. கே-ரி

### படை நடவடிக்கை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கத்திற்கும் அரசாங்கத்திற்கும் இடையே ஏற்பட்டுள்ள நம்பிக்கையின் அடிப்படையில் இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

ஆனையிறவு பாதை திறந்துவிடப்பட்டதும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் எந்தவிதமான மாற்றமும் இருக்காது.

வடக்கே உற்பத்தியாகும் பொருட்களை தெற்கே கொண்டு வருவதற்கும் தென்பகுதியில் உற்பத்தியாகும் பொருட்களை வட பகுதிக்கும் கொண்டு செல்வதற்கு இந்தப்பாதை மூடப்பட்டிருப்பது இடையூறாக இருக்கிறது இந்தப் பாதை திறக்கப்படுவதால் பொருட்களின் விலைபெருமளவில்விலை குறையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனையிறவு பாதை மீண்டும் திறக்கப்படுவதால் பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் இலங்கை வரும்போது வட பகுதி மக்கள் கொழும்பில் அவரை தரிசிப்பதற்கு வாய்ப்பு கிடைக்கும். இந்தப் புதிய நடவடிக்கையினல் விலை உயர்வினல் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள வடபகுதி மக்கள் பெரிதும் நன்மை அடைவார்கள். இதனல் அரசாங்கத்தின் மீது அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கை அதிகரிக்கும் என்று அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளதாகவும் இலங்கை வானெலி தெரிவித்தது. கே-சி

### அரசு-புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சந்தித்தபோதே திரு. கதிர்காமர் மேற்படி சமாதானப் பேச்சுக்கள் குறித்து அவரிடம் தெரிவித்தார்.

அரசு - விடுதலைப் புலிகள் பேச்சுக்களை குழப்ப இந்தியா முயற்சித்து வருவதாக குற்றம் சாட்டப்படும் இவ்வேளையில் இந்த சந்திப்பு இடம் பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (சி)

### அரசின் யுத்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் கூடிய பாதுகாப்புச் சபை முடிவு செய்தது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் மீண்டும் சமாதானப்பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னேடியாக இந்த யுத்த நிறுத்தம் அறிவிக்கப்படவுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.

போப்பாண்டவரின் இலங்கை விஜயத்திற்கு முன்பாக இனப்பிரச்னை தீர்வு தொடர்பான அமைதிப் பேச்சுவார்த்தைகளை அரசு ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனினும் விடுதலைப் புலிகளிற்குஅறிவித்து அவர்களின் கருத்தை அறிந்த பின்பே அரசு தனது யுத்த நிறுத்தத்தை அறிவிக்குமென எதிர்பார்க்கப்படுவதால் யுத்த நிறுத்தத்திற்கான திகதியை அரசு இன்னும் முடிவு செய்யவில்லைஎன்றும் கூறப்படுகிறது.

### கதிர்காமரின்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பயணம்' என்று டில்லி அதிகாரிகள் வர்ணித்திருப்பதாக பி. பி. சி. சந்தேசிய தெரிவித்தது.

இந்தியாவோடு பொருளாதாரம் சம்பந்தமான பேச்சுவார்த்தைகளை திரு கதிர்காமர் நடாத்தியுள்ளார். இப்பேச்சு பற்றி உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்ட அறிக்கையின் பிரகாரம் மேற்படி பேச்சுவார்த்தைகள் சிநேகபூர்வமாகவும் சுமூகமாகவும் இடம்பெற்றதென்று அறிவிக்கப்பட்டுள்ளதாக பி. பி. சி. சந்தேசியமேலுமதெரிவித்தது

இத்தவேளை திரு. லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியப் பிரதமர் திரு. நரசிம்மராவ், இந்திய ஜனதிபதி திரு. சங்கர் தயாள் சர்மா, வெளியுறவு அமைச்சர் திரு. தினேஷ்சிங் உட்பட பலரையும் சந்தித்து பலவிடயங்கள் குறித்தும் பேச்சுக்கள் நடாத்தவுள்ளார், -ம-சி

## மரண அறிவித்தல்

# திருமதி வைத்திலிங்கம் இலட்சுமி அம்மாள்

வீரமாணிக்கதேவன் துறையை பிறப்பிடமாகவும் தற்போது சிவன் வீதி உரும்பிராய் கிழக்கில் வசித்தவருமான திருமதி வ. இலட்சுமி அம்மா நேற்று காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும். சிவயோகநாதன், திருமதி புனிதக்கிளி, சண்முகநாதன் (மோகன்), காலஞ்சென்ற அமரர் பரமநாதன் (சோதி, நாட்டுப்பற்றாளர்), அமரர் தங்கேஸ்வரன், வீரவேங்கை சஞ்சீவி, கப்டன் நெடுமாறன் ஆகியோரின் அன்புத்தாயாரும், லலிதா, அமரர் சிறிதரன், கமலேஸ்வரி, றாட்லலிதா, கௌரி, (யாழ். பல்கலைக்கழக கணிதப்பிரிவு), ஆகியோரின் மாமியாரும், மகேசினி, வீரவேங்கை பதுமநிதி, கண்ணன், சுரதா, சுது, கபிலன், பிரசன்ன (கடற்புலிகள் மகளிர்), நிரந்தரி (போராளி - புகைப்படப்பிரிவு) சஞ்சீவி (போராளி), நிசாந்தி, மாறன், தங்கா, வேணி, வத்சலா, தங்கா, லோகிதன், சுகந்தன, காயத்திரி, உமையவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

இவரது உடல் அவரது விருப்பத்திற்கிணங்க யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு ஒப்படைக்கப்படுகிறது. இன்று காலை 10.30 மணிக்கு பல்கலைக்கழக மருத்துவபீடத்தினரிடம் வைபவரீதியாக ஒப்படைக்கப்படும், இவ்வறிவித்தலை போராளிகள், மற்றும் மாவீரர் - போராளிகள் குடும்பங்கள் மற்றும் ஏனையோரும் ஏற்றுக்கொள்ளவும்.

இப்படிக்கு
வ. மோகன்
[மகன்]

சிவன்வீதி,
உரும்பிராய் கிழக்கு.

(ஏ 4575)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994-ம் ஆண்டு டிசம்பர் மாவம் 08-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post OfficeSri uLanka nder Licence Number B/16336/B-